Registerd as a News Paper at the G.P.O
Srilanka, Under No.KJV 59/87

விலை 5/=

பக்கங்கள்-04

# ஐக்கியதீபம்
# AIKIYATHEEPAM

JAFFNA DISTRICT CO-OP COUNCIL

தீபம் 01 மார்கழி 2005 ஒளி - 9

**சிந்தனைச் சுடர்**

நீ வாழ்க்கையில் எவ்வாறு உயர்வது என்று நினைத்துப் பார்....! மற்றவர்கள் உயர்ந்து விடுவார்களோ என்று நினைக்காதே!

ஓர் அறிஞன்

### கூட்டுறவு சங்கங்களின் அபிவிருத்தியில்

## பல சவால்களுக்கு முகம்கொடுக்கவேண்டிய சங்க நிர்வாகிகள், பணியாளர்களுக்கு பயிற்சி அவசியம்

### கூட்டுறவு சபைத்தலைவர் பெ.கனகசபாபதி தெரிவிப்பு



கூட்டுறவுத்துறை இன்று பல சவால்களுக்கு முகம்கொடுத்து செயற்படவேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களை வழிநடத்தும் பொறுப்பு கூட்டுறவுச்சபைக்கு உண்டு. அந்தப் பொறுப்பை நாம் சரிவரச் செய்து எமது அங்கத்துவ சங்கங்ளை சிறந்த முறைகளில் இயங்க வைப்பதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம் என்று யாழ். மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் திரு.பெ.கனகசபாபதி தெரிவித்துள்ளார்.

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான கருத்தரங்கிற்கு தலைமை வகித்துப் பேசும்போதே திரு.பெ. கனகசபாபதி மேற்கண்டவாறு கூறினார்.

இக்கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகள் காலத்துக்குக் காலம் மாறினாலும் கூட்டுறவு இயக்கத்தின் தத்துவங்கள், பண்புகள் புனிதத்தன்மை என்பன ஒரு போதும் மாற்றமடையமாட்டாது. இந்நிலையில் மாறிமாறிவரும் நிர்வாகசபை உறுப்பினர்களுக்கு இத்தகைய பயிற்சிகளை அளிக்கவேண்டிய கடப்பாடு எமக்குண்டு.

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தளவில் அவற்றிற்கு அங்கத்தவர்களும் அவாகளது உழைப்புமே மூலதனமாக அமைந்துள்ளதால் சங்க செயற்பாடுகள் சம்பந்தமாக அவர்கள் பூரணமாக அறிவைப் பெறுவதற்கு பயிற்சிகள் அவசியமாகும.

கூட்டுறவு இயக்கத்தில் எத்தகைய முரண்பாடுகளும் கிடையாது. கூட்டுறவுத்துறையால் உயரவேண்டும் என்ற சிந்தனையை அமரர் வீரசிங்கம் எமக்கு போதித்துள்ளார். இந்நிலையில் நாம் அனைவரும் உள்ளார்ந்த சிந்தனையுடன் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் சேவையாற்றி கூட்டுறவுத்துறையை வளர்க்கவேண்டும் எனக் கூறினார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.சி.ஐயாத்துரை பேசும்போது கூறியதாவது.

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள் அச்சங்கங்களின் முதுகெலும்பு போன்றவர்கள். இந்நிலையில், அவர்கள் சங்கங்களுக்கு தங்களுடைய பங் களிப்பினை ஏனோதானோ என்ற மனப்பாங்குடன் செய்யாது தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து செயற்படவேண்டும்.

சங்க நிர்வாகிகளுக்கும், பணியாளர்களுக்கும் பலபயிற்சிகள் சங்க மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் அளிக்கப்பட்டுவருகின்றன. நெறியாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் கூட்டுறவு சம்பந்தமான விழிப்புணர்வையும் அறிவையும் விருத்தி செய்ய வேண்டுமென்ற குறிக்கோளுடனேயே இத்தகைய பயிற்சிகள் அளிக்கப்பட்டுவருகின்றன என்று கூறினார்.

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு.வீ.கே.அருந்தவநாதன் உரையாற்றுகையில் கூறியதாவது.

மனிதவலுவை ஒன்றுசேர்ப்பதன் மூலம் கூட்டுறவுத்துறையை வலுவுள்ளதுறையாக மாற்றலாம். அதற்கான பொறுப்பு கூட்டுறவுத்துறையைச் சேர்ந்த தலைவர்கள், பொதுமுகாமையளர்கள், அங்கத்தவர்கள் அனைவரையும் சார்ந்ததாகும். எல்லோரது ஆற்றல்களையும் இனங்கண்டு அதனைப் பயன்படுத்துவதன்மூலம் அவர்களது இலக்கை அடையமுடியும் என்றார்.

இக் கருத்தரங்கில் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய செயலாளருமான திரு.இ.பூபாலசிங்கம் சிறப்பரை ஆற்றினார்.

மாவட்ட கூட்டுறவுச் சபை மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி.வே.செல்வரத்தினம், யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரையாளர் திரு.இ. இரத்தினம், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாச கல்வி உத்தியோகத்தர் திரு.வ.சிவகுமார், யாழ். பல்கலைக்கழக வணி கத்துறை சிரேஷ்ட விரிவுரையாளார் திரு. கே.சிவராசா கூட்டுறவுச் சபை செயலாளர் திரு.பொ.சண்முகசுந்தரம் ஆகியோரும் உரையாற்றினர்.

## வியர்வைசிந்தி பொருளாதாரத்துக்கு வலுவூட்டும் அங்கத்தவர் பணியாளர்கள் பாராட்டுக்குரியவர்கள்

### கூ.அ.உதவி ஆணையாளர் சி.ஐயாத்துரை

வியர்வையை உரமாக்கி உற்பத்தியை அதிரித்து தேசிய பொருளாதாரத்துக்கு வலுவூட்டுவர்கள் சமுதாயத்தில் உயர்ந் தவர்களாவர். ந்த வகையில் பனை தென்னைவள அபிவிருத்க் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் கௌரவிக்கப்டுவது காலத்தின் தேவையாகும். பாராடடுப் பெறுவர்கள் மட்டுமல்ல அனைவரும் இந்த நாட்ன் பெருமைக்குரியவர்கள். தொழி லாளர்கள் ப்பொழுதும் ஒரு அமைப்பாக கூட்டுறவில் ணைந்து செயற்படும்போது நல்ல நன்மைகளைப் பறலாம் என்பதை பனை தென்னைவள அபிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் எடுத்ருக்கும் கெரவிப்பு விழா உணர்த்தியிருக்கின்து.

இவ்வாறு யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாளர் (ப.தெ.வ) சி.ஐயாத்துரை வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உறுப்பினர்கள், ணியாளர்கள், பிள்ளைகள கௌரவிப்பு விழாவில் ரதம விருநதினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார். இவ்விழா சமாசப் ணிமனையில் சமாசத் தலைவர் கி.தவராசா, லைமையில் நடைபெற்றது.

திரு.சி.ஐயாத்துரை தொடர்ந்து உரையாற்றுகையில், பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களதும் பணியாளர்களினதும் பிள்ளை களின் கல்வி மேம்பாட்டுக்கு சமாசம் உதவிவருவதுடன் ஆண்டு 5 புலைமைப் பரிசில் பரீட்சையில் அதிகமதிப் பெண் பெற்ற மாணவர்களை பாராட்டி பரிசளித்து வருகின்றது. இன்று தமது அங்கத்துவர்களில் அதிக உற் பத்தியில் ஈடுபட்டு சாதானை நிலைநாட்டிய உறுப்பினர்களுக்கும் தங்க விருது வழங்கி பாராட்டி கௌரவித்துள்ளது.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச சங்க சமாசத்தலைவர் கி.தவ்ராசா தலைமையுரையாற்றுகையில், எமது சமாசம் உறுபபினர்களைக் காலத்துக் காலம் பாராட்டிக் கௌரவித்து வந்துள்ளது. இன்று இவற்றுக் கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் உறுப்பினர் களின் சாதனை முயற்சிகளுக்கு தங்கவிருது வழங்கி கௌரவித்துள்ளோம் மனிதன் வாழும் காலத்தில் கௌரவிக்கப்படுகின்றபோது அவர்களது சாதனை சமுதாயத்துக்கு எடுத்துச் சொல்லப்படுகின்றது. அதன் மூலம் கௌரவிக்கப்படுபவர்களின் தலைமைத்துவ பண்பு உயர்வடைகின்றது. இதனால் அவர்கள் சமுதாயத்துக் பணியாற்ற தூண்டப்படுகின்றார்கள். இம்மாதிரியான கௌரவிப்பு விழாக்களை இனிவரும் காலத் தில் மேற்கொள்ள சமாசம் முடிவு செய்துள்ளது என்று கூறினார்.(4 ஆம் பக்கம்)

### யுத்தத்தினால் நலிவடைந்துள்ள

## கூட்டுறவுத்துறையை மேம்படுத்த மக்கள் வங்கி நீதி உதவிஅளிக்கும்

### மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் ரகு

கூட்டுறவுத் துறையின் அபிவிருத்திக்கு மக்கள் வங்கி உதவும் யாழ். மாவட்டத்தில் யுத்தத்தினால் நலிவடைந்துள்ள கூட்டுறவுத்துறையை மேம்படுத்த மக்கள் வங்கி நிதி ஆதாரங்களை வழங்கி வருவதுடன், கூட்டுறவுத் துறையின் பணியாளர்களின் பயிற்சித்திட்டங்களுக்கு நிதியுதவியும் வழங்கிவருகின்றன.

இவ்வாறு மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.ரகு யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக ஆளனியினருக்கான கருத்தரங்கில் கூறினார். கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத்தலைவர் பெ.கனக சபாபதி தலைமைதாங்கினார்.

இக்கருத்தரங்கு மக்கள் வங்கி அனுசரணையுடன் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினதும் மாவட்டமட்ட கூட்டுறவுச் சங்களினதும் இரண்டாம் படிகூட்டுறவுச் சங்களினதும் பொது முகாமையாளர்களும் கணக்காளர்களும் கலந்துகொண்டார்கள்.

வினைத்திறன் விருத்திச் கருத்தரங்கில், பிராந்திய வங்கி முகாமையாளர் ரகு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் குடாநாட்டில் தான் கூட்டுறவுத்துறை அதிகவளர்ச்சி பெற்று, தொழில்துறைகளில் அதிக இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலைவாய்ப்பு வழங்கும் அமைப்பாக இருந்து வந்துள்ளது. யுத்தத்தினால் குடாநாட்டில் கூட்டுறவுத் துறைதான் அதிக இழப்பைச் சந்தித்துள்ளது. எனவே, மீண்டும் குடாநாட்டில் கூட்டுறவுத்துறை உயர்வடைய வங்கிகளின் நிதிப்பாய்ச்சல் அவசியதேவையாகவுள்ளது என்றார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

**கூட்டுறவே நாட்டுயர்வு**

# கூட்டுறவுச் சட்டங்களின் பரம்பல்

இலங்கை கிராமிய மக்கள் தமது வாழ்க்கையை அன்னியோன்யமான உறவுகளை மையமாகக்கொண்ட அங்கத்தவர்களோடு பகிர்ந்துகொண்டு வாழும் சமூகமாகவே காணப்படுகின்றன. பிறப்பிலேயே கூட்டுறவு உணர்வுகளால் நிறைவடைந்த இவர்கள் 20 ஆம் நூற்றாண்டாகும்போது அவர்களுக்கே உரிய உணர்வுகளை படிமுறையாக திட்டமிடலின் ஊடாக வளர்ப்பதற்கு ஒரு அமைப்பு தேவைப்பட்டது.

இதன் விளைவாக கிராமிய பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்வதற்கும் கடன்பளுவினால் பாதிக்கப்பட்ட வறுமையால்வாடும் அப்பாவி விவசாயிகளின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காகவும் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களை அரசாங்கம் ஆரம்பித்தன. 1911 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கூட்டுறவு கட்டளை சட்டத்தின் கீழ் இச்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யும் கூட்டுறவு சங்கங்கள் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளல், கூட்டுறவு கொள்கைகளுக்கேற்ப கூட்டுறவு சங்கங்களை நல்ல முறையில் இயக்குவதும் அச்சங்கங்களுக்கு விஷேட சலுகைகளை வழங்குவதும் இக்கட்டளை சட்டத்தின் மூலம் கருதப்படுகின்றது. எப்பிடியிருப்பினும் இக்கட்டளை சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடானது வரையறுக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்படாத கடன் வழங்கும் சங்கங்களின் ஆரம்பம் மற்றும் அதன் செயற்பாடுகள் என என்பவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி 1912 இறுதியில் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் 3 ஸ்தாபிக்கப்பட்டன. அவை வருமாறு.

1. வெல்லடபத்து கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கம்.
2. ஹினிதும்பத்து கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கம்.
3. வெலிகம் கோரளை கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கம்.

கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் தவிர ஏனைய கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபிப்பதற்கு இக்கட்டளைச் சட்டத்தில் நிதி ஒதுக்கம் இல்லாத காரணத்தினால் 1911 முதல் 1925 வரையிலான காலப்பகுதி கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட காலப் பகுதியாகக் குறிப்பிடலாம். இக் கட்டளைச் சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் வருமாறு,

1.கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களைத் தவிர ஏனைய கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்ய முடியாமை.

2.இரண்டாம் நிலை சங்கங்களை பதிவு செய்ய முடியாமை.

இந்நிலை காரணமாக இரண்டாம் நிலை மற்றும் ஏனைய சங்கங்களை பதிவுசெய்யமுடியுமான வகையில் 1921 ஆம் ஆண்டு கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்க கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. இதனபடி முதலாவது கூட்டுறவு கட்டளைச் சட்டம் நீக்கப்பட்டு அதற்கு பதிலாக 1921 இன் 34 ஆம் இலக்கக் கூட்டுறவு கட்டளைச் சட்டத்தின் கீழுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் அதிகரிக்கப்பட்டன. இதன்படி கடன்வழங்கும் மற்றும் ஏனைய வகைகளில் உள்ள ஆரம்ப சங்க அங்கத்தவர்களாக இரண்டாம் நிலை சங்கங்களும் பதிவுசெய்ய முடிந்தது. அப்போதிருந்த அரச நிருவாகத்தை முடிந்தளவு குறைத்துக்கொள்வதற்கு 1925 ஆம் ஆண்டு கொழும்பு மாவட்ட கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டதானது, கூட்டுறவு இயக்கம் நிதியை மையமாகக்கொண்டு சுயாதீனமாக நடவடிக்கை எடுப்பதற்பான ஒரு முயற்சியாகும். கூட்டுறவு இயக்கத்தின் முன்னேற்றத்திற்கு தடையாக இருந்த பெரும்பாலான விடயங்களை இந்தக் கட்டளைச் சட்டம் நீக்கியது எனலாம். எனினும் முடிவுக்கு கொண்டு வருதல் சிக்கல்களைத் தீர்த்தல் என்பவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டில் உள்ளடக்காத காரணத்தல் அவற்றை கட்டளைக் கோவைக்குள் உள்ளடக்க வேண்டியிருந்தன. 1930 இல் கூட்டுறவுத் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டதோடு கூட்டுறவு இயககம் சரியான பாதையில் பயணிப்பதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. 1921 இன் 34 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக 1936 இல் 36 ஆம் இலக்கத்தில் புதிய கட்டளை சட்டம் உருவாக்கப்பட்டது.

இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பிக்கப்பட முன்னர் இலங்கை கூட்டுறவு இயக்கம் வெறுமனே கடன் வழங்கும் மற்றும் சேமிப்பு இயக்கமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் யுத்தகாலத்தில் நுவர்வோர் கடைச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1927 ஒக்டோபர் மாதம் முதன் முறையாக பஸ்ஸறைத் தோட்டத்தில் தோட்டத்தொழிலாளர் கடைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதே காலப் பகுதியில் தோட்டங்களுக்கு வெளியிலும் கூட்டுறவுக் கடைச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதை முகத்துவாரம், யாழ்ப்பாணம் மற்றும் தொரவக்க போன்ற பிரதேசங்களில் இத்தகைய கூட்டுறவுக் கடைகள் ஆரம்பிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படுகின்றன. 1945 ஏப்ரல் மாதத்தின் இறுதியாகும்போது சுமார் 4000 கூட்டுறவுக் கடைச்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அபபோது இருந்து உணவுப் பற்றாக குறை காரணமாக நுகர்வுப் பொருள்களை நியாயமாக பங்கீடு செய்யும் விலையை கட்டுப்படுத்தவும் அப்போதைய அரசுக்கு தேவையாக இருந்தது.

இவ்வாறு நுவர்வுக் கடை சங்கங்களைப் போலவே ஏனைய சங்கங்களும் ஆரம்பிக் கப்பட்டதுடன் இரண்டாம் நிலைச் சங்கங்களாக கூட்டுறவு நிருவாக சங்கம், வங்கிச் சங்கம் என்பன ஆரம்பிக்கப்பட்டன.

இத்துடன் 1945 இன் 45 ஆம் இலக்க மற்றும் 1949 இன் 21 ஆம் இலக்க திருத்தச் சட்டங்களில் கூட்டுறவு சட்டங்களில் புதிய சட்டங்கள் சேர்க்கப்பட்டன. இதன்படி ஆணையாளருக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை வருமாறு.

1. அரசினூடாக கூட்டுறவு இயக்கத்திற்கு தேவையான கட்டடங்களை பலவந்தமாக பொறுப்பேற்றல்.
2. கூட்டுறவு சங்கங்களில் செயற்குழு சட்டத்தைகளைத்தல் மற்றும் நிருவாக சபையினரை நியமிக்கும் அதிகாரம்.
3. கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தவர் உற்பத்திகளை கட்டாயமாக கூட்டுறவு சங்கங்களால் சந்தைப்படுத்தல்.

இதற்கிடையில் கடை சங்க முறைமை ஆரம்பமானதுடன் இந்தச் சங்கங்களுக்குத் தேவையான விற்பனை பொருள்களை ஏற்றுக்கொள்ளப்பட்ட வியாபாரிகளிடம் நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கு சிக்கலாக இருந்தமையால் 1943 ஜனவரி மாதம் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் கூட்டுறவு திணைக்களத்தின் ஒரு பிரிவாக ஸ்தாபிக்கப்பட்டது. எனினும் இந்த நிறுவனத்தின் நிருவாகம் மற்றும் பரிசோதனை என்பன சுயாதீன் சபையொன்றுக்கு வழங்க வசதிசெய்து கொடுப்பதற்காக 1949 இல் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் பற்றிய சட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

இது தவிர பல்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்களுக்கு விஷேடமாக மாகாண மற்றும் மாவட்ட கூட்டுறவு வங்கிகளுக்கு 1947 இன் 39 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க நிதியுதவி கட்டளைச் சட்டத்தின் கீழ் 1947.12.06 ஆம் திகதி பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு மத்திய வங்கியினால் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இதன்படி கூட்டுறவு இயக்கத்தின் உயர்ந்த வங்கி நிறுவனமாக இந்த வங்கி அக்காலத்தில் ஏற்பட்டது. எனினும் 1961 ஆம் ஆண்டு மக்கள் வங்கியின் ஆரம்பத்தோடு இந்த வங்கிகள் செல்லுபடியற்றதாக்கப்பட்டன.

1996 மற்றும் 1998 வருடங்களில் திருத்தம் செய்யப்பட்ட சட்டங்கள் 2 நடைமுறைப்பட்டதோடு அதன் நோக்கம் கூட்டுறவு சங்கங்களில் உள்ள சிக்கல்களை தீர்ப்பது பற்றி உருவாகியுள்ள விடயங்களில் மாற்றங்களை செய்ய வேண்டியிருந்ததாகும். மேலும், 1964, இன் 27 ஆம் இலக்க திருத்த சட்டத்திலும் தீர்ப்புகள் வழங்குதல் முடிவுக்குக்கொண்டு வருதல் போன்ற செயற்பாடுகள் பற்றிய அதிகாரம் இன்றும் விரிவுபடுத்தப்பட்டது.

1957 முதல் 1970 வரையிலான காலப்பகுதியில் கூட்டுறவு இயக்கத்தில் துரித மாற்றங்கள் ஏற்பட்டன. இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கடைச் சங்கங்கள் அனைத்தும் இக்காலப்பகுதியில் படிப்படியாக மறைந்து 1970 ஆகும்போது 5000 பல நோக்கு சேவை கூட்டறவு கடை சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கூட்டுறவு இயக்கத்தில் மீளமைப்புக்களை மேற்கொள்ளும்போது ஏற்படும் காலதாமதத்தை கட்டுப்படுத்துவதற்கு அரசினால் 1970 இன் 35 ஆம் இலக்க 'விஷேட ஏற்பாடுகள் சட்டம் அங்கீகரிக்கப்பட்டது. இந்த சட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன. இதன்படி பலவீனமடைந்திருந்த கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைத்து பாரிய ஆரம்ப சங்கமொன்றை உருவாக்குவதற்கும் ஏனைய சங்கங்களின் பதிவுகளை செல்லுபடியற்றதாக்குவதற்கும் ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. அது போலவே கூட்டுறவு இயக்கத்திற்கு உட்பட்ட யாதுமொரு அசையாச் சொத்துக்களை (காணி அல்லது கட்டடம்) சுவீகரிப்பதற்கு அந்த சட்டத்தின் மூலம் அமைச்சருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. 1971 கூட்டுறவுச் சங்க மீளமைப்பிற்கு இந்த 1970 இன் 35 ஆம் இலக்க (விஷேட ஏற்பாடுகள்) சட்டம் பாரிய அளவில் முக்கியத்துவம் பெற்றது.

இன்னும் 1970 இன் 34 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க (விஷேட ஏற்பாடுகள்) சட்டமொன்று அங்கீகரிக்கப்பட்டது. கூட்டுறவு சங்கம் பற்றிய கட்டளைச் சட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது முகங்கொடுக்கவேண்டிய சிரமங்களைத் தவிர்ப்பதற்கும், யாதுமொரு சங்தேகத்திற்கிடமான விடயங்களை தெளிவுபடுத்திக் கொள்வதற்கும் இச் சட்டம் அங்கீகாரம் பெற்றது. கூட்டுறவு சங்கங்களில் ஏற்படும் சிக்கல்களை தீர்ப்பதற்கு ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட தீர்ப்பாளர்களின் வழக்கு தீர்ப்புக்களில் நடைமுறை சாத்தியங்கள் தொடர்பாக ஏற்பட்ட பெரும்பாலான இடர்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமான விடயங்கள் இச்சட்டத்தினால் நிவர்த்திசெய்யப்பட்டது.

இதன் பிறகு கூட்டுறவு இயக்கத்திலே பாரிய மாற்றமானது 1971 கூட்டுறவு சங்க திருத்தத்தின் கீழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் தோற்றத்துடன ஏற்பட்டது. இதுவரை நுகர்வுப் பிரிவுக்கு அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்த நுகர்வோர் சங்கங்களுக்கு பல நோக்கு சேவைகளை வழங்குவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தன. பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் மீளமைப்பினூடாக பாரியளவு கூட்டுறவு சங்கங்கள் ஸ்தாபிக் கப்பட்டு பலம் வாய்ந்த பொருளாதார அலகொன்றாக செயற்படுவதற்கான சந்தர்ப்பமும் கிடைத்தது.

1972 இன் 5 ஆம் இலக்க கூட்டுறவு சட்டத்தின் கீழ் தற்போதுள்ள கூட்டுறவு மீளமைப்பிற்கு உட்பட்ட சகல கூட்டுறவுச் சங்கங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்தச் சட்டமும் 1983 இன் 32 ஆம் இலக்க மற்றும் 1992 இன் 11 ஆம் இலக்க சட்டங்கள் இரண்டின் ஊடாக திருத்தப்பட்டது.

1972 இன் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபின் பிறகு 1976 மார்ச் 28 ஆம் திகதி இலக்கம் 203/3 யு அவசர நிலைமை (கூட்டுறவு அதிகார சபை) கட்டளையின் கீழ் 22 மாவட்டங்களில் 22 கூட்டுறவு அதிகாரசபைகளை அப்போது இருந்த கூட்டுறவு அமைச்சரினால் வர்த்தமானி மூலம் அறிவித்தல் செய்யப்பட்டது.

இதற்குப் பிறகு 1987 இன் 12 ஆம் இலக்க (திருத்த சட்டமொன்றின் மூலமாக அவசர கால கட்டளைகளை நடைமுறைப்படுத்தி அத்தியாவசிய சேவையின் கீழ் கூட்டுறவு சங்கங்களுக்கு நிர்வாக சபைகளை நியமிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த அவசரகாலக் கட்டளைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இந்த வகையில் 1992 இன் 11 ஆம் இலக்க (திருத்த) சட்டத்தில் முக்கிய அம்சங்கள் வருமாறு,

1. பொருளாதார ரீதியில் பலம்வாய்ந்த சங்கங்களை பதிவு செய்தல்.
2. அங்கத்துவ பங்குகளின் பெறுமதியை ரூபா.100/= வரை உயர்த்துதல், இதன்படி அங்கத்துவத்தின் ஊடாக சங்கத்தின் மூலதனத்தை உயர்த்துவதற்கு முயற்சி செய்தல்.
3. இந்த பங்குகளை 10 தவணைகளில் செலுத்தி முடிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கல்.
4. அங்கத்துவத்தை பெற்று ஒரு வருடம் பூர்த்தியாகும் வரை சங்கத்தின் நிர்வாகத்தில் பங்கு கொள்ள முடியாமை.
5.இளைஞர்களை செயற்குழு அங்கத்துவத்துக்குள் சேர்த்தல். (18-35 வயது)
6. அரசியல் பதவிகளில் உள்ள உறுப்பினர்களுக்கு செயற்குழுவில் நியமனம் பெறுவதற்கு முடியாதவாறு சட்டங்களை விதித்தல்.
7. கூட்டுறவு செயற்குழு அங்கத்துவர்களின் சொத்துக்கள் பொறுப்புக்கள் பற்றிய விளக்கங்களை பெறல்.
8.இலாப பங்கீடு, நிதி முதலீடு மற்றும் அங்கத்துவமற்றவர்களுக்கு கடன் வ்ழங்குவதற்கு ஆணையாளருக்கு இருந்த அதிகாரம் நீக்கப்படல்.
9. செயற்குழு கலைப்பதற்கு மற்றும் செயற்குழுவிற்கு நபர்களை நியமிப்பதற்கு ஆணையாளருக்கு இருந்த அதிகாரம் நீக்கப்படல்.

இவ்வாறு ஆணையாளருக்கு இருந்த அதிகாரம் படிப்படியாக நீக்கப்பட்டதோடு பொதுச்சபையின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டதால் அங்கத்தவர்களுக்கு சுயாதீனமாக செயற்பட சந்தர்ப்பம் கிடைத்தது. மேலும் அரச நிதியை பயன்படுத்தும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்தச் சட்டத்தில் விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

1. நிதியத்தின் முதலீட்டுக்கு ஆணையாளரின் அங்கீகாரம் தேவைப்படுகின்றது.
2. யாப்பு வழக்கின்போது அல்லது பின்னர் பொதுச் சபை நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பத்தில் அந்தச் செயற்குழுவை நீக்கி நிர்வாக சபையொன்றை நியமிப்பதற்கு ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றமை.
3. சங்கத்தின் துணை யாப்புவதிக்கேற்ப நியமிக்கப்பட்ட செயற்குழுவின் மொத்த எண்ணிக்கையில் சரிபாதிக்கு கூடுதலாக எண்ணிக்கையொன்று நிருவாக சபைக்கு நியமிப்பதற்கு ஆணையாளருக்கு அதிகாரம் கிடைத்துள்ளமை.

## சட்டக்கோவை

கூட்டுவுச் சட்டங்களின் பிரிவுகளை மேலும் விளக்குவதற்கு சட்டரீதியாக பிரபல்யப்படுத்தப்பட்டது. இதன்படி ஆரம்பசாசனத்திற்கு 1947.09.24 ஆம் 9773 ஆம் இலக்க சட்டக் கோவை

(3 ஆம் பக்கம் பார்க்க)




அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம் வல்லைவெளியில் புதிதாக அமைத்த வெல்ல உற்பத்தி நிலையத்தை அச்சுவேலி வடக்கு கிராம சேவையாளர் நா.மதுரசேகரம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அச்சுவேல சமுர்த்தி வங்கிக்கு தண்ணீர் தாங்கியை சங்கத் தலைவரும், பொது முகாமையாளரும் அன்பளிப்புச் செய்தபோது பிரதேச செயலக சமுர்த்தி வங்கி முகாமையாளர் பெற்றுக்கொள்வதையும் படத்தில் காணலாம்.

பிறரது அச்சுறுத்தல்களுக்கும் மிரட்டல்களுக்கும் பயந்து உனது சுயத்தை இழந்துவிடாதே
~ஓர் அறிஞர்

ஐக்கிய தீபம்

## கூட்டுறவு அபிவிருத்திச் சட்டம

ஒரு நாட்டுக்கு எத்தகைய கூட்டுறவுச் சட்டங்கள் இருக்கவேண்டுமென்பதில் கூட்டுறவாளர்களிடத்திலே பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் நிலவி வருகின்றது. சட்டங்கள் எதுவுமின்றி கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட்டால்தான் கூட்டுறவு இயக்கதின் புனிதத்தன்மையும் உன்னதமான இலட்சியமும் கொண்ட சமுதாய அமைப்பொன்றை உருவாக்கலாம்.

வெவ்வேறு நாடுகளின் கூட்டுறவுச் சட்டங்களிடையே அடிப்படை ஒற்றுமைகள் இருக்கவேண்டும். வெவ்வேறு நாடுகளின் பண்பாடுகளுக்கிடையே முக்கிய வேறுபாடுகள் இருப்பதுபோல கூட்டுறவுச் சட்டங்களிடையேயும் முக்கிய வேறுபாடுகள் இருக்கும். இது கலாநிதி வல்கோவின் கருத்து.

'கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதற்கும் அவை ஏனைய முயற்சிகளோடு சமஅளவானமுறையில் தொழிற்படும் உரிமைகளைப் பேணுவதற்கும் குறிப்பாக கட்ட இணைக்கப்படவேண்டும். இத்தகைய சட்டங்கள் சங்கத்தை நிறுவுவதற்கும் பதிவதற்குமான ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதோடு அதன் ஏனைய செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். ஆனால் இவ்வேற்பாடுகள் கூட்டுறவாளரினதும், கூட்டுறவு நிறுவனங்களினதும் சுயாட்சித் தன்மை நிறைந்து சுதந்திரத்தை மறு பார்வையாக அமையக் கூடாது' என்று அனைத்துலக கூட்டுறவு நிறுவன மாநாடு கருத்து வெளியிட்டுள்ளது.

இந்த வகையில் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருளாதார நன்மைகளைவிட அதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய அறம் சார்ந்த நன்மைகளைப் பெறமுடியும்.

இலங்கை கூட்டுறவு இயக்க வரலாற்றில் 1911 ஆம் ஆண்டுமுதல் காலத்துக்குகாலம் பல்வேறு கூட்டுறவுச் சட்டவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கைக் கிராமிய மக்களின் கிராமிய பொருளாதார அபிவிருத்தியை மையமாகக்கொண்டு அவர்களின் வாழ்வியலில் அந்நியோன்னியமான உறவுகளைப் பலப்படுத்தும் வகைகளில் 1911 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 7 ஆம் இலக்க கூட்டுறவுச் சட்டத்தின் மூலம் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டன. இவை கூட்டுறவு எண்ணங்களுக்கும் தத்துவங்களுக்கும் ஏற்ப வளர்த்தெடுக்கப்பட்டன.

1970 ஆம் ஆண்டின் 34, 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் விசேட சட்டங்கள், 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்களின் சட்டம், 1978 ஆம் ஆண்டின் 12 இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் விசேட ஏற்பாடுகள் சட்டம், 1983 ஆம ஆண்டின் 32 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் திருத்தச் சட்டம் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் திருத்தச்சட்டம் என்பவற்றுடன் கூட்டுறவு வேலையாளர்கள் நன்மைகருதி உருவாக்கப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்டம் இச் சட்டம் தொடர்பான 1992 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கத் திருத்தச் சட்டம் என்பன அரசாங்கத்தினால் காலத்துக்குகாலம் கொண்டுவரப்பட்ட சட்டங்களாகும்.

இந்த வகையில்தான் அரசாங்க கூட்டுறவுச் சங்கங்களின் எதிர்கால அபிவிருத்தி கருதி பழைய சட்டங்களில் பல மன்றங்களை உட்புகுத்தி கூட்டுறவு அபிவிருத்திச் சட்டம் எனக் குறிப்பிட்டு திருத்தச் சட்டம் ஒன்றை விரைவுசெய்துள்ளது. அச் சட்டம் இப்போது கூட்டுறவாளர்களின் கைக்குக் கிடைத்துள்ளது. இத்திருத்தச் சட்டம் பற்றி கூறுவதாக இருந்தால் இத்திருத்தச் சட்ட மூலத்தின் பிரகாரம் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பெரும்பாலும் முழுமையான சுதந்திரத்தை வழங்கி அதாவது கூட்டுறவுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளதென்பதை இங்கு குறிப்பிட்டுக் கூறலாம்.

புதிய சட்டத்தில் பங்கு ஒன்றின் பெறுமதி 1000 ரூபா ஆக ஆக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாக உள்ளது. அத்துடன் புதிய சட்டத்தின் 52 (10)2ம் 54(2)ஊ ஒன்றுடன் ஒன்று முரண்பட்டவையாக காணப்படுகின்றது. 52(10) தொடர்ச்சியாக இரண்டு சந்தர்ப்பங்களில் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் பணிப்பாளர் பதவியை வகித்தவர் மீண்டும் பணிப்பாளராக வரமுடியாது என்று கூறப்பட்டுள்ளது.

54(2) தொர்ச்சியாக இரண்டுமுறை பணிப்பாளர் பதவியை வகிக்கமுடியாது என்று கூறப்பட்டுள்ளது. இதில்முரண்பாடு காணப்படுகின்றது. பிரிவு 55(9) பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டு ஒரு வருடத்துக்குள் பதிவாளர் நாயகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டுறவுபற்றிய பயிற்சி பெற்ற சான்றிதழ் ஒன்றை சமர்ப்பிக்காமல் போனால் பணிப்பாளர் பதவி இழப்பர் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் பல புதிய அம்சங்கள் இச்சட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளன.

கூட்டுறவே நாட்டுயர்வு

## பிரசவவிடுமுறை கூட்டுறவுஊழியர் விதிக்கோவை 2:7 திருத்தம்

1. 2005.02.03 திகதிய அரச நிர்வாக அமைச்சின் 04.'.2005 இலக்கங்கொண்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் பெண் அரச ஊழியர்களுக்கு ஒவ்வொரு மகப்பேற்றுக்கும் 84 நாள்கள் பிரசவ விடுமுறையும் 84 நாள்கள் அரைச் சம்பளத்துடனான பிரசவ விடுமுறையும் 84 நாள்கள் சம்பளமற்ற பிரசவ விடுமுறையும் வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இதனை கூட்டுறவு ஊழியர்களுக்கும் நடைமுறைப்படுத்த வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தீர்மானித்துள்ளமையால் கூட்டுறவு ஊழியர் விதிக்கோவை 2 ஆம் அத்தியாயம் 2:7 உப விதிக்கு பதிலாக பின்வரும் விதி 2005.01.01 திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தும் வண்ணம் பதிலீடு செய்யப்படுகின்றது.

இவ்வாறு வடகிழக்கு, கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளரினால் பிரசவ விடுமுறை கூட்டுறவு ஊழியர் விதிக்கோவை 2:7 திருத்தம் எனும் தலைப்பில் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பொது முகாமையாளருக்கு அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்சுற்று நிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

### 2:7 பிரசவ விடுமுறைகள்

2:7:1 நிரந்தர, தற்காலிக அமய அல்லது பயிலுநர் பெண் அலவலர்கள் இப்பிரிவின் கீழ் பிரசவ விடுமுறையை பெறுவதற்கு உரித்துடையவர்கள் ஆவர்.

### 2:7:2 சம்பளத்துடனான பிரசவ விடுமுறைகள்

2:7:2:1 கூட்டுறவு சேவையிலுள்ள பெண் ஊழியர் ஒருவருக்கு உயிர்வாழும் ஒவ்வொரு மக்பேற்றுக்கும் 84 தினங்கள் சம்பளத்துடன் விடுமுறையை அனுபவிக்க உரித்துடையவராவர். பிரசவம் நிகழ்ந்து 4 வாரங்கள் செல்ல முன் ஊழியர் மீண்டும் கடமையை பொறுப்பேற்க அனுமதிக்கப்படமாட்டார். இப்பிரிவின் கீழ் விடுமுறையை பெற்றுக்கொள்வதற்கு வைத்திய அத்தாட்சிப்பத்திரம் ஒன்றினையோ அல்லது பிறந்த குழந்தையின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தையோ சமர்பித்தல் வேண்டும்.

2:7:2:2 இவ்வாறு வழங்கப்படும் பிரசவ விடுமுறையை கணக்கிடும்பொழுது அவ்விடுமுறைக் காலத்திற்குள் வருகின்ற அரசாங்க விடுமுறைகள் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தினங்களை அதில் உள்ளடக்கலாகாது.

2:7:2:3 இவ்விடுமுறை காலத்தை பணியாளரின் சொந்த விடுமுறைகளில் இருந்து கழித்தல் ஆகாது என்பது டன் இவ் விடுமுறைக் காலத்தை முழு சம்பளத்துடனான ஒரு விசேட விடுமுறையாக கருதவேண்டும்.

2:7:2:4 மகப்பேற்றின்போது பிறக்கும்போதே மரணம் நிகழ்கின்ற ஒரு பிள்ளைப் பிறப்பிலும் பிரசவத்திலிருந்து 6 வாரங்கள் செல்ல முன் குழந்தை மரணிக்கின்ற சந்தர்ப்பத்திலும் குழந்தையின் மரண சான்றிதழை அல்லது வைத்தியச் சான்றிதழை ஒன்றினை சமாப்பிக்கும் பட்சத்தில் விசேட சம்பளத்துடனான விடுமுறையாக குழந்தை பிரசவித்த திகதியிலிருந்து ஆறு வார கால விடுமுறை வழங்க வேண்டும்.

### 2:7:3 அரைச் சம்பளத்துடனான பிரசவ விடுமுறைகள்

2:7:3:1 மேற்கூறிய 2:7:2:1 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் படி விடுமுறை பெற்றுக்கொண்ட பின் குழந்தையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அரைச் சம்பளத்துடனான 84 நாள்கள் விடுமுறை பெற உரித்துண்டு.

2:7:3:2 அரைச் சம்பளத்துடனான விடுமுறைக் காலத்திற்குள் வருகின்ற அரசாங்க விடுமுறைகள், சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தினங்களை அரைச்சம்பள விடுமுறையாக கருதவேண்டும்.

### 2:7:4 சம்பளமற்ற விடுமுறைகள்

2:7:4:1 மேற்கூறிய 2:7:2:1 ஆம் உட்பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைகள் முடிந்த பின் மேலும் குழந்தையைப் பாதுகாக்கும் அவசியம் ஏற்படும்போது மட்டும் சம்பளமற்ற 84 நாள்கள் விடுமுறை வழங்கலாம்.

2:7:4:2 இப்பிரிவின் கீழ் வழங்கப்படுகின்ற விடுமுறைகளைக் கணிப்பீடு செய்யும்போது அந்த விடுமுறைகாலத்திற்குள் வரும் அரசாங்க விடுமுறைகள், சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை தினங்களை அதில் உள்ளடக்க வேண்டும்.

2:7:4:3 இந்த விடுமுறையை வழங்க முன் பணியாளருக்கு கொடுக்கப்பட்டுள்ள கடன்களின் அல்லது முற்பணங்களின் மாத தவணைக் கட்டணங்களை தொடர்ந்து அறவிடுவதற்காக திருப்திகரமான ஒரு ஒழுங்கைச் செய்வது சங்கத் தலைவரினதும் பொறுப்பாகும்.

*2:7:5 கருச்சிதைவுக்காக (Abottion & Miscarriage) விடுமுறை அவசியப்படுமாயின் வைத்தியச் சான்றிதழின் பேரில் பணியாளருக்கு உரித்தான மிகுதியான ஓய்வு விடுமுறையில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.*

*2:7:6 2:7:1 ஆம் உட்பிரிவின் கீழ் பெற்றுக்கொண்ட விடுமுறைக் காலங்கள் முடிவடைந்த பின் 2:7:3:1 ஆம் உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள விடுமுறைகளைப் பெறாவிட்டால் தனது குழந்தைக்கு பால் ஊட்டுவதற்கு வழமையாக சேவை நிலையத்திலிருந்து செல்லும் நேரத்திற்கு ஒரு மணித்தியாலங்கள் முன்னம் வெளிச் செல்ல அவர்களுக்கு அனுமதி வழங்கப்படல் வேண்டும். இவ் அனுமதி வழங்கப்பட வேண்டியது குழந்தையின் வயது ஆறு மாதங்கள் பூர்த்தியாகும் வரை மட்டுமாகும்.*

*2:7:7 மேலும் பெண் பணியாளர் ஒருவர் கர்ப்பமுற்றிருக்கும் காலம் ஐந்து மாதங்கள் ஆகும்போது சேவை நிலையத்திற்கு வருகைதரும் நேரத்தை 1/2 மணித்தியாலம் பிந்தியும் கடமை முடிந்து வெளிச் செல்லும் நேரத்தை 1/2 மணித்தியாலம் முந்தியும் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. இச்சலுகை வழங்கப்படுவது பணியாளர் பிரசவ விடுமுறை பெறும் வரை மட்டுமாகும்.*

*2:7:8 மேற்கூறிய 2:7:3:1, 2:7:4:1 பிரிவுகளின் கீழ் குறிப்பிட்டுள்ள விடுமுறைகள் அங்கிகரிக்கப்புடுவது குழந்தை உயிர் வாழும்போது மட்டுமாகும். விடுமுறை பெற்றுக்கொள்வது குழந்தையைப் பாதுகாப்பதற்கானதால் ஏதேனும் காரணத்தால் குழந்தை மரணித்துவிட்டால் அத் திகதி தொடக்கம் ஏழு நாள்களின் பின் இவ்விடுமுறைகள் செல்லுபடி அற்றதாகும்.*

*2:7:9 மேற்கூறிய 2:7:3:1, 2:7:4:1 பிரிவுகளின் கீழ் வழங்கப்படும் விடுமுறைகள் சம்பள ஏற்றங்களுக்கும் ஓய்வூதிய அலுவல்களுக்கும் தடையாக அமைதல் ஆகாது. சம்பளமற்ற விடுமுறைக் காலத்திறிக்குள் ஏற்படும் வெற்றிடங்கள் போதும் பதவி உயர்வுகளின்போதும் இந்த விடுமுறைக் காலத்தை தடையாக கருதலாகாது.*

*2:7:10 மேற்கூறிய 2:7:31, 2:7:4:1 பிரிவுகளின் கீழ் குறிப்பிட்டுள்ள விடுமுறைகளில் ஒரு பகுதியை இரத்துச் செய்து சேவைக்கு சமூகமளிக்க விரும்பினால் சங்கத் தலைவருக்கு அறிவித்து அவ்வாறு செய்யலாம்.*

02.அதற்கமைவாக விதிக்கோவை 27:2 இன் பிரமாணம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இச்சுற்றுநிருபம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரதும் அனுசரணையுடன் வெளியிடப்படுகின்றது என்று அச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## கூட்டுறவுச் சட்டங்களின்.........

(2 ஆம் பக்க தொடர்ச்சி)

யும் 1950.03.04 ஆம் திகதி 10086 ஆம் இலக்க சட்டக் கோவையும் மற்றும் 1998.07.11 ஆம் திகதி 114 ஆம் இலக்க சட்டக்கோவையும் தயாரிக்கப்பட்டன.

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் 1972 இன் 5 ஆம் இலக்க கூட்டுறவு சட்டத்தில் 61 ஆவது பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட சட்டக்கோவை வர்த்தமானியின் 93/5 மற்றும் 94.01.10 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இதன்படி கூட்டுறவு சட்டத்தில் சில பிரிவுகளில் வெளியிடப்பட்ட விடயங்கள் வருமாறு:

* கூட்டுறவுச் சங்கங்களை பதிவுசெய்தல்.
* அங்கத்துவ பெயர்ப் பட்டியல்.
* உரிமையாக்கிக்கொண்ட உயர்ந்தளவு பங்குகளின் அளவு.
* இலாப பங்கீடு
* உயர்த்தப்பட்ட கடன் எல்லை
* பொதுக் கூட்டம்
* செயற்குழு
* அவசியமான துணைவிதிகள்
* துணைவிதிகளின் திருத்தம்
* கடன் வழங்கலை எல்லைபபடுத்தல்
* கணக்குப் பதிவுசெய்தல்
* கணக்காய்வு
* கூட்டுறவு நிதியம்
* ஒதுக்கம்
* சிக்கல்

மேற்படி விடயங்களின் கீழ் சட்டத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு

கூட்டுறவு ஊழியர்கள் பற்றி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக் குழு (1972 இன் 12 ஆம் இலக் கத்தின் கீழ் சட்டரீதியாக்கப்பட்டது. இந்த சட்டத்தின் கீழ் கூட்டுறவு ஊழியர்களின் நியமனம் நீக்கம் உட்பட சகல நிருவாக நடவடிக்கைகள் குறித்து கூட்டுறவு ஆணைக்குழு விதிக் கோவையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு விதிக்கப்பட்ட ஆரம்ப விதிக்கோவை இலக்கம் 15009/12யு மற்றும் 1972.05.12 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதன்பிறகு தற்போது நடைமுறையில் உள்ள கூட்டுறவு ஊழியர்கள் பற்றிய விதிக்கோவை இலக்கம் 169/8 மற்றும் 1981.12.01 ஆம் திகதி வெளியிடப்பட்டது. தற்போது கூட்டுறவு சங்க ஊழியர்கள் இந்த விதிக் கோவையின் நிபந்தனைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

### செயற்குழு வாக்களிப்பு

கூட்டுறவு சங்கங்களின் செயற்குழு வாக்களிப்பு நடத்துவதற்கு ஆணையாளரினால் பின்வருமாறு கட்டளைகள் வெளியிடப்பட்டுள்ளன.

1. 231/12 -1976.09.30
2. 297/7-1977.12.28
3. 707/14 1982.03.27

இவ்வாறு வெளியிடப்பட்ட கட்டளை 707/14 ஆகியனவே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. கூட்டுறவுச் சங்க வாக்களிப்பு முறைகள் இந்த கட்டளைகளின் படியே நடைபெறுகின்றன.

### துணைவிதிகள் (உள்ளடக்க சட்டங்கள்)

அந்தந்த கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள சட்டங்கள் காணப் படுகின்றன. அவை உள்ளடக்க சட்டங்கள் என அழைக்கப்படுகின்றன.

1. துணை விதிகள்
2. செயல் கட்டளைகள்

இந்த உள்ளகச் சட்டங்கள் அந்தந்த கூட்டுறவு சங்கங் களின் பல்வேறுபட்ட முறையில் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இதன்படி துணை விதிகள் மற்றும் செயல் கட்டளைகள் ஆணையாளர் மற்றும் பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தன் பிறகு செயற் படுத்தப்படுகின்றன.







வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம், 2004 ஆம் ஆண்டிற்கான சிறந்த அங்கத்தவர்கள், 2005 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலைமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்கள், பணியாளர்களின் பிள்ளைகளை பாராட்டி பரிசில்களும், தங்கப்பதக்கங்களும் வழங்கிய விழாவில் கூ.அ. உ.ஆணையாளர் (ப.தெ.வ) திரு.சி.ஐயாத்துரை மங்களவிளக்கேற்று வதையும், கூட்டுறவு சபைத் தலைவர் பெ.கனகசபாபதி அங்கத்தவர் ஒருவருக்கு தங்கப்பதக்கம் சூட்டுவதையும், சமாசத் தலைவர் கி.தவராசா, மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.கே.அருந்தவநாதன் ஆகியோர் பரிசில்கள் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும படங்களில் காணலாம்.

## பாராட்டு, தங்கப் பதக்கம் பரிசில்கள் பெற்றவர்கள் விபரம்

வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு சங்க சமாகத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களில் பின்வருவோர் 2004 ஆம் ஆண்டின் சிறந்த அங்கத்தவர்களாகப தெரிவுசெய்யப்பட்டு பாராட்டும் பரிசிலும் பெறுவோர் பெயர் விபரம் வருமாறு:

இராமசாமி ரஞ்சிதராசா - யாழ்ப்பாணம், சின்னத்தம்பி சுப்பிரமணியம் - அரியாலை, கதிரவன் தவராசா - கோப்பாய், தம்பிரத்தினம் மோகனதாஸ் - கோண்டாவில், கந்தையா சத்தியசீலன் - சாவகச்சேரி, இராசப்பு வேதநாயகம் - பண்டத்தரிப்பு, மார்க்கண்டு குமாரதாஸ் - சங்கானை, முத்துத்தம்பி அமிர்தலிங்கம் - காரைநகர், கணபதி வரதராசா - ஊர்காவற்றுறை, மகேந்திரன் நவமுகன் - பருத்தித்துறை, தில்லையம்பலம் தங்கவேலாயுதம் - கரவெட்டி, பூபாலசிங்கம் சுதாகுமார் - தெல்லிப்பழை, சின்னத்துரை தேவராசா - அச்சுவேலி, இறப்பியல் நீக்கிலாஸ் - வேலணை, ஆண்டி சிவபாதம் - மானிப்பாய், குட்டியன் சிவகந்தராசா - கொடிகாமம் , மாணிக்கம் தளையசிங்கம் - சுன்னாகம், யோகன் திருவருட்சீலன் - அனலைதீவு, வேலன் சிவயோகராசா வடமராட்சி கிழக்கு.

2005 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற அங்கத்தவர்கள், பணியாளர் பிள்ளைகளின் பெயர் விபரம் பின்வருமாறு.

செல்வி இராசப்பு ஹஜிதா-கோப்பாய், செல்வன் யோகராசா ரஜீவன்-கொடிகாமம், செல்வன் மகாலிங்கம்-கார்த்தீபன் கொடிகாமம், செல்வன் ரஜீந்திரராசா சஞ்சிதன், கரவெட்டி, செல்வி சிவகுமார் சுபர்னா-கரவெட்டி, செல்வன் பரமேஸ்வரன் றஜீத்-பருத்தித்துறை, செல்வன் சிவனேஸ்வரன் அஜிந்-பருத்தித்துறை பணியாளர் பிள்ளை-செல்வி சுவேதிகா சுதாகரன்-வலிகாமம் கொத்தணி.

## எரிபொருள் விற்பனை நிலையம் அமைப்பதற்கு விண்ணப்பம்

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சுமார் ஐம்பது லட்ச ரூபா செலவில் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய எரிபொருள் விற்னை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான ஏறபாடுகளைச் செய்து வருகின்றது.

இந்த நவீன எரிபொருள் விற்பனை நிலையம் புறாப்பொறுக்கி எனும் இடத்தில் அமைக்கப்படவுள்ளது. இவ்எரிபொருள் விற்பனை நிலையத்தை அமைப்பதற்கான விண்ணப்பப் பத்திரத்தை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சங்கம் அனுபபிவைத்துள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

### றொபேட் ஓவனின் இறுதிநாட்களில்.......

கூட்டுறவுத் தந்தை றொபேட் ஓவனின் இறுதி நாட்கள் பரிதாபத்துக்குரியவை. "நான் என் காலத்தை விடமுந்திப் பிறந்துவிட்டேன். எனது வாழ்க்கை பலனற்றதாகிவிடவில்லை. முக்கியமான சில உண்மைகளை உலகுக்கு எடுத்துக் கூறியுள்ளேன்." என்று தனது மரணப் படுக்கையில் கூறியுள்ளார்.


வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் தனது உறுப்புரிமைச் சங்கங்கள், கொத்தணிகள், சித்த மருத்துவ கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் அங்கத்தவர்கள் பணியாளர்கள் அனைவருக்கும் தமது நத்தார், புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மனநிறைவடைகின்றது.



புதுவருட நத்தார் வாழ்த்துக்கள்



மேலும் அனைத்துக் கூட்டுறவாளர்களும் மலரும் புதுவருடத்தில் சகல வளங்களையும் பெற்று சிறப்பாக வாழவேண்டும் என்று இறைவனைவேண்டுகிறோம்.

இங்ஙனம் :

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்


### வியர்வை சிந்தி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட கூட்டுறவுசபைத் தலைவர் திரு. பெ.கனகசபாபதி கௌரவ விருநதினராக கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.வி.கே.அருந்தவநாதன திரு.பொ.சண்முகசுந்தரம் (செயலாளர் - யாழ்.மாவட்டக் கூட்டுறவு சபை) ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கத்தவர்கள் பணியாளர்களுக்கான பரிசில்களையும் தங்கப் பதக்கங்களையும் சமாசத் தலைவர், பிரதம விருந்தினர்கள் கௌரவ விருந்தினர்கள், சிறப்பு விருநதினர்கள் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். சமாசப் பொதுமுகாமையாளர் ஜே.பி. குணரத்தினம் நன்றி கூறினார்

### கூட்டுறவுத்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி பேசுகையில் கூறியதாவது.

இன்றைய சூழலில் அரசாங்கத்தினால் காலத்துக்கு காலம் அறிவிக்கப்படும் சம்பள அதிகரிப்பை சங்கங்கள் பணியாளர்களுக்கு வளங்குவதற்கு மிகவும் சிரமப்படுகின்றன. ஜீவமரணப் போராட்டத்திற்கு தள்ளப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டிற்கு புதிய கூட்டுறவுச் சட்டம் ஓரளவிற்கு வளிவகுக்கக் கூடியதாக வரையப்பட்டுள்ளது.

கூட்டுறவுத் திணைக்களத்தின் கட்டுப்பாடுகள் பல தளர்த்தப்பட்டு சங்கங்கள் சுதந்திரமாக இயங்கக்கூடிய தன்மை உருவாக்கப்பட்டுள்ளது பெரும்பாலான பலநோக்குக் சங்கங்கள் தற்போது மக்கள் வங்கியிடமிருந்து பெறும் மேலதிக பற்றிலிருந்தெ தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. இச் சங்கங்கள் இந்நிலையிலிருந்து மாறுவதற்கு தற்போதைய போட்டிப் பொருளாதாரத்தில் விற்பனையை மேம் படுத்துவதற்கு வேண்டிய நவீன வசதிகளையும் உத்திகளையும் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இக் கருத்தரங்கில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள சட்ட ஆலோசகர் சட்டத்தரணி செல்வி எஸ். துஷாந்தி, யாழ்.பல்கலைக் கழக வணிகத் துறை தலைவர் கே.கே.அருள்வேல், சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சிவராசா, மக்கள் வங்கி பிரதான வீதி கிளை முகாமையாளர் எஸ். கென்றி, கூட்டுறவு அபி விருத்தித் திணைக்கள தலைமைக் காரியாலய பரிசோதகர் (கணக் காய்வு) ரி.என்.ராஜா, யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்யாளர் எஸ்.ரமேஸ் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

## சமாசத்தின் சமூகநல மேம்பாட்டு நிதி உதவித் திட்டத்தின் கிழ் உதவிகள்

இவ்வாண்டு 4000 க்கு மேற்பட்ட உறுப்பினர்கள், பணியாளர்கள் பிள்ளைகளுக்கு ரூபா 1,000,000 வுக்கு பாடசாலை உபகரணம் கொள்வனவு செய்து சமாசம் வழங்கி வருகின்றது. என்று வடமாகாண ப.தெ.அ.கூ. சமாசம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ப.தெ.வ.அ.கூ. சமாசத்தால் வருடம் தோறும் வழங்கப்பட்டுவரும் சமூக நலத் திட்டத்தின் கீழ் அங்கத்தவர்கள், பணியாளர் பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டை மேம்படுத்தும் நோக்கத்தோடு வழங்கி வரும் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சமாசத்தில் தற்போது நடைபெற்றுவருகின்றது.

சமாசத்தில் உறுப்புரிமை பெற்ற சங்கங்களின் உறுப்பினாகளின் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காக அவர்களது கல்வியை ஊக்கிவிப்பதற்காக பாடசாலை உபகரணங்கள் வழங்கி வருகின்றது. அது மட்டும் அல்லாது இவ்வகைச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தி நிதியும் அவர்களுக்கும் சமாசம் வருடம தோறும் வழங்கிவருகின்றது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இச்சேவையோடு மட்டும் சமாசம் நிற்காது 5 ஆம் ஆண்டு புலைமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற உறுப்பினர் பணியாளர் பிள்ளைகளை கௌரவித்து ரூபா 5000 மும் பாடசாலை உபகரணமும் வழங்கிவருகின்றது. மேலும் வருடம் தோறும் சிறந்த அங்கத்தவாகளை தெரிவுசெய்து அவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிப்பு விழாச் செய்வதும் சமாசத்தின் பணிகளில் ஒன்றாக இருக்கின்றது.

## எரிபொருள் விற்பனை நிலையம் விரைவில் திறந்துவைக்கப்படும்

யாழ்ப்பாணம் முற்றவெளிப பகுதியில் யாழ்ப்பாணம் பலநோககுக் கூட்டுறவுச் சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டுவரும் எரிபொருள விற்பனை நிலையம் விரைவில் பொதுமக்கள் பாவனைக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டுவரும் இவ் எரிபொருள் விற்பனை நிலையத்தின் கட்டுமாணப் பணிகள் யாவும நிறைவுபெற்று தற்போது கணனிமயப்படுத்தப்பட்ட பம்பிகள் பொருத்தும் பணிகளும் மின் இணைப்பு வேலைகளும் துரித கதியில் நடைபெற்று வருவதாக சங்க உத்தியோகத்திர் தெரிவித்தார்.


### யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை (வது) கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்

1000 கதிரைகளுடன் வாடகைக்கு விடுதல்

குறைந்த கட்டணம்

உங்கள் திருமண வைபவங்களையும், உங்கள் பிள்ளைகளின் நாட்டிய, இசை அரங்கேற்றங்களையும், உங்களால் நடத்தப்படும் கலை, கலாசாரவைபவங்கள், மாநாடுகள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள்,

மற்றும்

பயிற்சிப் பட்டறைகள் ஆகியவற்றை குறைந்த செலவில் நிறைந்த மனதுடன் நடத்தி முடிப்பதற்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தினை நாடுங்கள்.

நிறைந்த சேவை

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை,
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்,
இல:12 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரியுடன் தொடர்புகொண்டு உங்கள் மண்டபத் தேவைகளைப் பூர்த்திசெய்யுங்கள்.

செயலாளர், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை.